முருகப்பெருமான் துணை

உலக ஞானத்தலைவன் முருகப்பெருமான் துறையூர் ஓங்காரக்குடில் ஆசான் ஆறுமுக அரங்க மகா தேசிகருக்கு அருளிய ஞான அறிவுரை ஆசி காண்டம்

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்** பாகம் : 1483

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**21.10.2023**, சனிக்கிழமை

1. கருணைவடிவான அரங்கனே
கலியினில் சிறந்த ஞானியே
பெருமைகொள்ளும் வண்ணம் தர்மத்தை
பேருலகமெல்லாம் செய்யும் தர்மனே
2. தர்மனே ஆறுமுக அரங்கனே
தவசியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
பெருமைகூட ஆற்றல் பெருக
பூவுலகில் ஞான அறிவுரை ஆசி
3. ஆசி தனை சோபகிருது
துலைத் திங்கள் உரைப்பேன்
(சோபகிருது வருடம் ஐப்பசி மாதம் 04 ம், 21.10.2023, சனிக்கிழமை)
அரங்கனே கலியின் சிறந்த ஞானி
அரங்கன் தர்மமே கலியினில் சிறந்த தர்மம்
4. தர்மத்தை ஏற்று கொண்டு உலகோர்
தவசி அரங்கனை குருவாக வணங்கி
வருங்காலம் தொடர்ந்து அரங்கன் திருவடி பற்றி
வல்லமைபட தர்மத்தை செய்து வந்தால்
5. வந்தவர்க்கெல்லாம் ஞானபலம்
வடிவேலன் என்னருளாக கிட்ட நேரும்
நேர்மைகொண்டு அரங்கன் திருவடி பற்றி
நிலவுலகில் தொண்டாற்றும் சீடர்கட்கே
6. சீடர்கட்கே வருங்காலம் ஞானிகளாகும்
சிறப்பறிவு கூடி இனிதே
மறுப்பின்றி வரமும் சித்தியும் மகான் சுப்ரமணியர் யான்
ஆற்றலாக தந்து அருள்புரிவேன்

7. அருளவே அரங்கன் பலம் உலகம் அறிய அறிய
அகிலத்துக்கே மாற்றம் உண்டு உண்டு
வரமாக அரங்கனை வணங்கி வர
வருவோர்க்கெல்லாம் ஞான சித்தி உண்டு உண்டு

ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–